


ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஈரோடு மாநகராட்சி வீரப்பன்சத்திரம் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் கழிப்பறை கட்டிடத்தினை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி திறந்து வைத்தார். நிகழ்வில் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், துணை மேயர் வி.செல்வராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### திருச்சியில் – இன்று

# ‘ஓரணியில் தமிழ்நாடு’ ஆலோசனைக் கூட்டம்!

## கழக முதன்மைச் செயலாளர் – அமைச்சர் கே.என்.நேரு அறிவிப்பு!



டெல்டா பகுதிகளிலுள்ள மாவட்டச் செயலாளர்கள் மற்றும் பொறுப்பு அமைச்சர்கள் - தொகுதிப் பார்வையாளர்களுடன் “ஓரணியில் தமிழ்நாடு” தொடர்பான ஆலோசனைக் கூட்டம் இன்று (30.07.2025 - புதன்கிழமை) காலை 10 மணியளவில் திருச்சி கலைஞர் அறிவாலயத்தில் நடைபெறும்.

இக்கூட்டத்திற்கு சம்பந்தப்பட்ட மாவட்டச் செயலாளர்கள், பொறுப்பு அமைச்சர்கள், தொகுதிப் பார்வையாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்திடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அமைச்சர் **கே.என்.நேரு**
கழக முதன்மைச் செயலாளர்
தி.மு.க.

### ஒன்றிய அரசின் மத்திய பல்கலைக் கழகங்களில்

# பெண்கள் பாதுகாப்புக்கான புகார் கமிட்டி செயல்படுகிறதா?

## மக்களவையில் – நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி கேள்விக்கு இணை அமைச்சர் பதில்!

புதுடெல்லி, ஜூலை 30 -

ஒன்றிய அரசின் மத்திய பல்கலைக் கழகங்களில் பெண்களின் பாதுகாப்புக்கான Internal Complaints Committees பற்றிய கேள்விகளை தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்ற குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி ஜூலை 28 ஆம் தேதி மக்களவையில் எழுப்பினார்.

”பல்கலைக்கழக மானியக் குழு (யுஜிசி) விதிமுறைகள் மற்றும் பணியிடத்தில் பெண்கள் மீதான பாலியல் துன்புறுத்தல் தடை மற்றும் தீர்வுச் சட்டம் (2013) வழிகாட்டுதல்களின் கீழ் ஒன்றிய அரசின்

மத்திய பல்கலைக்கழகங்களில் Internal Complaints Committees எனப்படும் உள் புகார் குழுக்களை (ஐசிசி) நிறுவுவது கட்டாயம் ஆக்கப்பட்டுள்ளதா?



அப்படியென்றால், ஐ.சி.சி.களை அமைத்த மத்திய பல்கலைக்கழகங்களின் விவரங்கள் என்ன? விதிகள், வழிகாட்டுதல்களின்படிதான் குழுக்கள் அமைக்கப்பட்டதா, அக் குழுக் களின் உறுப்பினர்கள் பற்றிய விவரங்கள் என்ன?

மேற்கண்ட வழிகாட்டுதல்கள் மற்றும் சட்டத்தை கண்டிப்பாகப் பின்பற்றுவதை உறுதி செய்ய அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

மத்திய பல்கலைக் கழகங்களில் அமைக்கப்பட்ட ஐ.சி.சி. குழுக்களின் செயல்பாடுகள் பற்றி அரசாங்கம் மதிப்பீடுகள் அல்லது தணிக்கைகளை நடத்தியதா? இல்லையென்றால், அதற்கான காரணங்கள் என்ன?” ஆகிய கேள்விகளை கனிமொழி கருணாநிதி எம்.பி. கேட்டிருந்தார்.

இந்தக் கேள்விகளுக்கு ஒன்றிய கல்வி அமைச்சகத்தின் இணையமைச்சர் டாக்டர் சுகந்தா மஜூம்தர் அளித்துள்ள பதிலில்,

“பணியிடத்தில் பெண்கள் மீதான பாலியல் துன்புறுத்தல் தடை மற்றும் தீர்வுச் சட்டம், 2013 மற்றும் பல்கலைக்கழக மானியக் குழுவின் விதிமுறைகள், 2015 ஆகியவற்றின் கீழ் Internal Complaints Committees எனப்படும் உள் புகார் குழுக்களை மத்திய பல்கலைக் கழகங்களில் நிறுவுவது கட்டாயமாக்கப் பட்டுள்ளது.

ஒன்றிய கல்வி அமைச்சகத்தின் கீழ் உள்ள அனைத்து மத்திய பல்கலைக்கழகங்களும் சட்டம் மற்றும் யு.ஜி.சி. வழிகாட்டுதல்களுக்கு இணங்க ஐ.சி.சி.களை அமைத்துள்ளன. பரிந்துரைக்கப்பட்ட விதிமுறைகளின்படி, ஐ.சி.சி.யின் தலைமை அதிகாரியாக ஒரு மூத்த பெண் ஆசிரியர், இரண்டு ஆசிரியர் உறுப்பினர்கள் மற்றும் இரண்டு ஆசிரியர் அல்லாத ஊழியர்கள், மூன்று மாணவர் பிரதிநிதிகள் மற்றும் அரசு சாரா நிறுவனங்களில் (என்ஜிஓக்கள்) இருந்து ஒரு உறுப்பினர் இருக்க வேண்டும். மொத்த உறுப்பினர்களில் குறைந்தது பாதி பேர் பெண்களாக இருக்க வேண்டும்.

இந்த உள் புகார் குழுக்கள் திறம்பட செயல்படுவதை உறுதி செய்யும் பொருட்டு... புகார்கள் பதிவு செய்தல், பாலின சமத்துவம் பற்றிய ஆய்வு ஆகியவற்றுக்காக சக்ஷம் (SAKSHAM ) போர்டல் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

உயர்கல்வி நிறுவனங்களில் பெண்களுக்கு பாதுகாப்பான மற்றும் உறுதியான சூழலை உறுதி செய்வதற்காக புகார்களை தெரிவிக்கவும், வழிகாட்டுதல்களைப் பெறவும், இது தொடர்பான ஆலோசனைகளைப் பெறுவதற்கும் கட்டணமில்லா தொலைபேசி எண் அமைக்கப்பட்டுள்ளது.

புதிய கல்விக் கொள்கை 2020 இன் அடிப்படையில் இவை உருவாக்கப்பட்டுள்ளன” என்று ஒன்றிய கல்வித் துறை இணையமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

### தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் சுழற்சிப் பொருளாதாரத்தை ஊக்குவிக்க

# இணைய வழி கழிவுப் பரிமாற்ற மையம் அறிமுகம்!

சென்னை, ஜூலை 30 -

நிலைத்த மற்றும் சூழல் சார் வளர்ச்சியை மையமாகக் கொண்டு, பொருளாதார முன்னேற்றத்தை ஊக்குவிப்பதில் தமிழ்நாடு ஒரு முன்னணி தொழில்துறை மாநிலமாகத் திகழ்கிறது.

இருப்பினும், விரைவான தொழில்துறை விரிவாக்கம், சாம்பல், மின்னணு கழிவுகள் மற்றும் பல தவிர்க்க முடியாத கழிவுகளையும் உருவாக்குகிறது.

இத்தகைய கழிவுப் பொருட்களை மதிப்பு மிக்க வளங்களாகக் கருதி, உயர் மதிப்புள்ள சந்தைப்பொருட்களாக மாற்றும்போது, அது சுற்றுச்சூழலுக்கு உகந்ததாகவும், சுழற்சி பொருளாதாரத்தை (Circular Economy) மேம்படுத்தும் வகையிலும் அமைகிறது.

இந்த நோக்கத்தை அடைவதற்கான தொலைநோக்கு பார்வையுடன் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் (TNPCB) தொடங்கும் ஒரு புதுமையான முயற்சியே இந்த இணைய வழி கழிவு பரிமாற்ற மையம் (Online Waste Exchange Bureau). இந்த தளம், கழிவு உருவாக்குபவர்களையும் சான்றளிக்கப்பட்ட மறுசுழற்சி நிறுவனங்கள் மற்றும் பிற கழிவு பயன்பாட்டாளர்களையும் இணைக்கும் ஒரு பாலமாக செயல்படுகிறது. இதன்மூலம், கழிவுகளை பயனுள்ள பொருட்களாக மாற்ற வழிவகை செய்வதுடனும், கழிவு பரிமாற்றத்தையும் எளிதாக்குகிறது.

இத்தளம், கழிவு உற்பத்தியாளர்கள் தங்களது பொருட்களை அதன் வகை, அளவு, மற்றும் இருப்பிடம் ஆகியவற்றின் அடிப்படையில் பட்டியலிட வகை செய்வதுடன், அவர்களை பொருத்தமான மறுசுழற்சி நிறுவனங்கள் மற்றும் பிற பயனாளர்களுடன் இணைக்க உதவுகிறது.

இதன்மூலம், சூழல் சார் கழிவு மேலாண்மை திறம்பட செயல்படுவதுடனும், மேம்பட்ட பொருளாதார வளர்ச்சிக்கும் உறுதுணையாக அமைகிறது.

பலர் ஏற்கனவே இந்த இணைய வழி கழிவு பரிமாற்ற தளத்தில் பதிவு செய்துவிட்டார்கள்.

இன்றே பதிவு செய்து தீர்வின் ஒரு பகுதியாகுங்கள்!

இணைய வழி கழிவு பரிமாற்ற மையம் கழிவு அதன் வாய்ப்பினை சந்திக்கும் இடம் tnpcb.gov.in/OWEMS ல் இன்றே அணுகுங்கள்.

இவ்வாறு தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

### தி.மு.க. சுற்றுச்சூழல் அணி

# கடலூர் மேற்கு மாவட்ட துணைத் தலைவர் நியமனம்!

## சுற்றுச்சூழல் அணிச் செயலாளர் கார்த்திகேய சிவசேனாபதி அறிவிப்பு

கடலூர் மேற்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணைத் தலைவராக **உதயன் (எ) மகேஷ்** (17, அறிஞர் அண்ணா வீதி, புதுப்பேட்டை, விருத்தாசலம் - 606 001. கடலூர் மாவட்டம்) அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட சுற்றுச்சூழல் அணி நிர்வாகிகளுடன் இவர் இணைந்து பணியாற்றுவார்.

**“அண்ணா அறிவாலயம்”** | **கார்த்திகேய சிவசேனாபதி**
சென்னை - 18. | செயலாளர்
நாள் : 29.07,2025 | தி.மு.க. சுற்றுச்சூழல் அணி

### நீலகிரி மாவட்டத்தில்

# ‘உங்களுடன் ஸ்டாலின்’ முகாம் தொடர்பான ஆய்வுக் கூட்டம்!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் – அரசு கொறடா கா.ராமச்சந்திரன் பங்கேற்பு!

உதகை, ஜூலை 30 –

நீலகிரி மாவட்டத்தில், நடைபெற்று வரும் ‘உங்களுடன் ஸ்டாலின்’ முகாம், மற்றும் குன்னூர் சட்டமன்ற தொகுதியில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்ட பணிகளின் முன்னேற்றம் தொடர்பான ஆய்வுக் கூட்டம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் தலைமையில், அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் , மாவட்ட ஆட்சித்தலைவர்; திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

நீலகிரி மாவட்டம், உதகை தமிழகம்; அரசு விருந்தினர் மாளிகையில், மாவட்டத்தில் நடைபெற்று வரும் ‘உங்களுடன் ஸ்டாலின்’ முகாம் மற்றும் குன்னூர் சட்டமன்ற தொகுதியில் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்ட பணிகளின் முன்னேற்றம் தொடர்பான ஆய்வுக்கூட்டம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் தலைமையில், அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், சுய உதவிக்குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ள கடனுதவிகள் குறித்தும், முதல்;;வரின் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் சாலை பணிகள் குறித்தும், கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வரும் வீடுகள் குறித்தும், கூட்டுறவுத்துறை சார்பில் வழங்கப்பட்டுள்ள பயிர்க்கடன் குறித்தும், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம் குறித்தும், வேளாண் இயந்திர மயமாக்குதலுக்கான துணை இயக்க திட்டம் குறித்தும், தமிழ்ப் புதல்வன் மற்றும் புதுமைப் பெண் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் குறித்து சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் கேட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

முதலமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு சட்டமன்ற பேரவையில் மக்களின் குறைகளை நேரடியாக கேட்டறியும் பணிகள் துவங்கப்படும் என அறிவித்திருத்தார். அதன்படி அனைத்து நகர்ப்புற மற்றும் ஊரக பகுதிகளில் ‘உங்களுடன் ஸ்டாலின்’ என்ற திட்டத்தினை,

முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார். அதனை தொடர்ந்து, அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் நடைபெற்று வருகிறது. மேலும், ‘உங்களுடன் ஸ்டாலின்” திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் மொத்தம் 10,000 சிறப்பு முகாம்கள் நடத்தப்படவிருக்கிறது. இம்முகாமானது 15.07.2025 முதல் அக்டோபர் 2025 மூன்று கட்டங்களாக நடைபெற இருக்கிறது. இம்முகாமில், அரசுத்துறை அலுவலர்கள் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள் மீது கனிவுடன் பரிசீலனை செய்து 45 நாட்களுக்குள் தீர்வு காணும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

மேலும், ஏற்கனவே நமது மாவட்டத்தில் உதகை மற்றும் கூடலூர் சட்டமன்ற தொகுதியில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சித் திட்ட பணிகள் தொடர்பாக ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. அதனை தொடர்ந்து, இன்றைய தினம் குன்னூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில், கட்டப்பட்டு வரும் புதிய நகர்ப்புற துணை சுகாதார நிலையங்களை விரைவில் முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும். இது போல் பல்வேறு துறைகளின் சார்பில் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்ட பணிகளை மழைகாலத்திற்கு முன்பாக முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், அரசால் வழங்கப்படும் நிதியினை சரியான முறையில் செலவு செய்திடும் வகையில்; திட்டமிட்டு உரிய காலத்திற்குள் வளர்ச்சி திட்ட பணிகளை முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், பொதுமக்களின் அடிப்படை வசதிகளான சாலை உள்ளிட்ட பணிகளை விரைந்து முடித்திட துறை அலுவலர்கள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். இவ்வாறு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்கள் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

முன்னதாக, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அவர்கள், அரசு தலைமை கொறடா அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் முன்னிலையில், தமிழ்நாடு அமைப்புச்சாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற, பெண் ஆட்டோ ஓட்டுநர்கள் சொந்தமாக ஆட்டோ ரிக்ஷா வாகனம் வாங்குவதை ஊக்குவிக்கவும், அவர்களுக்கான சுயதொழில் வாய்ப்பினை உருவாக்கவும்;, வருமானம் ஈட்;டும் திறன் மற்றும் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தும் நோக்கில் 3 பெண் ஆட்டோ ஓட்டுநர்களுக்கு தலா ரூ.4 இலட்சம் மதிப்பில் (தலா ரூ.1 இலட்சம் மானியம்) புதிய ஆட்டோ ரிக்ஷா வாகனத்திற்கான சாவிகள் மற்றும் நிர்வாக அனுமதி ஆணைகளை வழங்கினார்.

அதனை தொடர்ந்து, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், மாவட்ட செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் பல்வேறு துறைகளின் சார்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள சாதனைகள்; குறித்த நான்;காண்டு சாதனை மலரினை வெளியிட்டார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமதி என்.எஸ். நிஷா மாவட்ட வன அலுவலர் கௌ தம், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) செல்வி அபிலாஷா கௌர், குன்னூர் சார் ஆட்சியர் செல்வி சங்கீதா, மகளிர் திட்ட அலுவலர் மரு.ஜெயராமன், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.கீதாஞ்சலி, தோட்டக்கலைத்துறை இணை இயக்குநர் திருமதி ஷிபிலாமேரி, நகராட்சி ஆணையாளர்கள் மோகன் (கோத்தகிரி), இளம்பரிதி (குன்னூர்), தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாநில ஆணைய உறுப்பினர் மு.பொன்தோஸ், கோத்தகிரி நகர்மன்ற தலைவர் திருமதி ஜெயக்குமாரி, நகர்மன்ற துணைத்தலை வர்கள் திரு.ரவிக்குமார் (உதகை), வாசிம்ராஜா (குன்னூர்), சுற்று லாத்துறை அலுவலர் திருமதி துர்கா தேவி, மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் (பொ) நந்தகுமார், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் உதவி செயற் பொறியாளர் திருமதி சங்கீதா, மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி பிரவீணா தேவி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ எம்.பி. பங்கேற்பு!

# கடலூர் மேற்கு மாவட்ட வழக்கறிஞர் அணி பயிற்சிப் பாசறைக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் சி.வி.கணேசன் அறிக்கை!

கடலூர், ஜூலை 30 -

கடலூர் மேற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி.வி.கணேசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

முதலமைச்சர் கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க கழக இளைஞரணி செயலாளர் தமிழ் நாடு துணை முதல்வர் அவர்களின் வழிக்காட்டுதலின் படி வருகின்ற (01-08-2025 வெள்ளிக்கிழமை) மாலை 4.00 மணியளவில் நெய்வேலி தொ.மு.ச. அலுவலகத்தில் கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க. வழக்கறிஞர் அணியின் பயிற்சி பாசறைக் கூட்டம் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் கழக சட்டத்துறை செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ எம்.பி கலந்து கொண்டு 2026 ஆம் ஆண்டு நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தல் சம்பந்தமாக பயிற்சி மற்றும் ஆலோசனை வழங்க உள்ளார்கள்.



அதுசமயம் ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், கழக மண்டல நிலை ஒருங்கிணைப்பாளர் ZLC கழக மாவட்ட நிலை ஒருங்கிணைப்பாளர் DLC சட்டமன்ற தொகுதி ஒருங்கிணைப்பாளர் CLC கழக பேரூர்/ நகரம் ஒருங்கிணைப்பாளர் TLC முதல் நிலை ஒருங்கிணைப்பாளர் FLC மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் சி.வெ.கணேசன் தெரிவித்துள்ளார்.

### அமெரிக்கா கூறுவது போன்று

# இந்திய அரசு வரிக்குறைப்பை ஒத்துக் கொண்டதா?

## மக்களவையில் கலாநிதி வீராசாமி கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 30 -

“அமெரிக்கா கூறுவது போன்று இந்திய அரசு வரிக்குறைப்பை ஒத்துக் கொண்டதா?” என்று நாடாளுமன்ற மக்களவையில் டாக்டர் கலாநிதி வீராசாமி கேள்வி எழுப்பினார்.

வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி மக்களவையில் கேள்வி நேரத்தின் போது, இந்திய அரசுக்கும் அமெரிக்க அரசுக்கும் வரி நிர்ணயிப்பது சம்பந்தமாக நடந்த பேச்சு வார்த்தையின்போது, அமெரிக்கா கூறுவது போல இந்திய



அரசு வரிகுறைப்புகள் செய்வதாக ஒத்துக் கொண்டதா? அப்படியாயின் அவற்றின் விவரங்களைத் தருக என்றும் மேலும் வரி விகிதங்களில் மாற்றம் செய்யும்போது, அதனால் பாதிக்கக்கூடிய தொழில் நிறுவனங்களுடன் ஆலோசனை செய்யப்பட்டதா? தொழிலாளர் சங்கங்களின் கருத்துக்கள் கேட்டறியப் பட்டனவா? அவற்றின் விவரங்களைத் தருமாறு கேட்டார்.

இவ்வினாவிற்கு பதிலளித்த ஒன்றிய வர்த்தகம் மற்றும் தொழிற்சாலைகள் துறையின் துணை அமைச்சர் ஜிதின் பிரசாதா அவர்கள் கடந்த 13.02.2025 அன்று இந்திய அரசும் அமெரிக்கா அரசும் இணைந்து வெளியிட்ட அறிக்கையில் , இருநாடுகளுக்கு இடையே நடைபெற்று வரும் வர்த்தகத்தில் , இருநாடுகளுக்கும் பயனளிக்கும் வகையில் பேச்சு வார்த்தைமூலம் ஒருமித்த கருத்தை எட்டுவதற்கு தொடர்ந்து முயற்சி செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டது. மேலும் இதனைத் தொடர்ந்து, இந்திய தொழில் நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்துப் பிரிவினரிடம் இருந்து கருத்துக்கள் பெறப்பட்டு, தொடர்ந்து ஆலோசனைகள் செய்யப்பட்டு வருகின்றன என்று கூறினார்.



இராணிப்பேட்டை மாவட்டம் சோளிங்கரில் நடைபெற்ற ”உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமினை பார்வையிட்டு மனுக்கள் மீது தீர்வு காணப்பட்ட பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் ஜே.யு.சந்திரகலா, சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.முனிரத்தினம், நகராட்சி தலைவர் தமிழ்ச்செல்வி அசோகன், துணைத் தலைவர் பழனி, நகராட்சி ஆணையாளர் நந்தினி, வட்டாட்சியர் செல்வி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர் .